








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 15.11.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்








# இந்திய நிகழ்வுகள்

- மகாராஷ்டிரா மாநிலத்தின் நாசிக் மாவட்டத்திலுள்ள பீரங்கிப்படை மையத்தில், அமெரிக்காவின் தயாரிப்பான **M777 155mm/39 Calibre Ultra Light Howitzer** மற்றும் தென் கொரிய தயாரிப்பான **K9 VAJRA-T 155mm/53** ஆகிய பீரங்கிகள் இந்திய இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

- விமானப் பொறியியல் மற்றும் தளவாடங்களின் வளர்ந்து வரும் போக்கு என்ற கருத்தின் மீதான இரண்டு நாள் கருத்தரங்கு **(AVIAMAT- 2018) புது டெல்லியில்** நடைபெற்றது.
  - இது இந்திய விமானப் படை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

- 2019 பொதுத் தேர்தலுக்காக பொது விவாதங்கள் மற்றும் குடிமை நிர்வாகப் பணிகளில், பங்களிப்புகளை ஊக்குவித்து இளைஞர்களை உற்சாகப்படுத்தும் வகையில் **#Power of 18** என்ற பிரச்சாரத்தை **டிவிட்டர் இந்தியா** அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறும் கடற்படைத் தளபதிகள் மாநாட்டின் 2018ம் ஆண்டிற்கான இரண்டாம் பதிப்பு புதுடெல்லியில் நடைபெற்றது.
  - இம்மாநாட்டின் கருத்துரு **'உகப்பாக்கம் மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள்'** என்பதாகும்.
  - இந்த மாநாடானது பிரதமரின் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி **(SAGAR-Security and Growth for All in the Region)** என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

- டெல்லி மாநில அரசானது, உருது கலாச்சாரம் மற்றும் அதன் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் **Jashn-e-Virasat-e-Urdu** என்ற விழாவை கன்னாட் பிளேசில் உள்ள சென்டல் பூங்காவில் கொண்டாடி வருகிறது.
  - ஆறு நாட்கள் நடைபெறும் இந்த விழாவானது இன்று (15.11.2018) நிறைவடைகிறது.
  - இந்த விழாவில் உருது பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

WeShine Academy TM

## உலக நிகழ்வுகள்

- **33**வது **ASEAN** உச்சிமாநாடு சிங்கப்பூரில் **நவம்பர் 11** அன்று தொடங்கியது. இதில் ASEAN அமைப்பின் **10** உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கூடி பொருளாதாரம், பாதுகாப்பு, கலாச்சார ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.
  - 33வது ASEAN மாநாட்டின் கருப்பொருள் - **Resilient and Innovative ASEAN**

## விளையாட்டு நிகழ்வுகள்

- உலக மல்யுத்த கூட்டமைப்பு (**UWW**) உலக ஆடவர் **மல்யுத்த தரவரிசைப் பட்டியலை** வெளியிட்டது. இதில் ஆடவர் 65 கி.கி பிரிவில், இந்திய மல்யுத்த வீரர் **பஜ்ரங் புனியா முதலிடத்தை** பிடித்துள்ளார். இவர் நடப்பு சீசனில் காமன்வெல்த், ஆசிய போட்டியில் தங்கம், புடாபெஸ்டில் நடந்த உலக சாம்பியன் போட்டியில் வெள்ளி உள்பட மொத்தம் 5 பதக்கங்களை வென்றுள்ளார்.
  - UWW என்பது தொழில்முறை மல்யுத்த விளையாட்டிற்கான ஒரு சர்வதேச நிர்வாக அமைப்பாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **IIT-ரூர்க்கியின்** அறிவியலாளர்கள் புற்றுநோய் செல்களை ஒரே நேரத்தில் கண்டறியவும் அழிக்கவும் கூடிய **ஒளிரும் கார்பன் பொருளை** உருவாக்கியுள்ளனர்.
  - இந்த நானோ அளவிலான ($10^{-9}$ **மீட்டர்**) கார்பன் பொருட்கள் புற்றுநோய் செல்களை கண்டறியும் தன்மை மற்றும் சிகிச்சையளிக்கும் தன்மை ஆகியவற்றுக்கான முகவர்களாக செயல்படும்.
  - இவை **ரோஸ் பெர்விங்கிள்** என்ற தாவர இலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# விருதுகள்

- **பிரான்ஸின்** உயரிய குடிமகன்களுக்கான விருதான **‘நைட் ஆப் தி லீஜியன் ஆப் ஹானர்’ என்ற விருது ஜவஹர் லால் சரீனுக்கு** வழங்கப்பட்டுள்ளது.
  - இவ்விருது இந்தியாவிற்கான பிரெஞ்சுத் தூதரான **அலெக்ஸாந்தர் லெக்லர்** என்பவரால் வழங்கப்பட்டது.
  - இந்த விருதானது, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையேயான கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துவதிலும் பிரெஞ்சு மொழியை ஊக்குவித்தலிலும் முக்கிய பங்காற்றியதற்காக வழங்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

- **உலக நீரிழிவு தினம் - நவம்பர் 14**
  - உலக நீரிழிவு தினமானது **2006ல்** ஐக்கிய நாடுகளின் அதிகாரப்பூர்வ நாளாக மாற்றப்பட்டது
  - 1992ம் ஆண்டில் சார்லஸ் பெஸ்ட் உடன் இணைந்து இன்சுலினைக் கண்டறிந்த **ஃபிரெடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளை நினைவு கூறுவதற்காக, நவம்பர் 14** அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2018 மற்றும் 2019ம் ஆண்டிற்கான கருத்துரு – **குடும்பம் மற்றும் நீரிழிவு என்பதாகும்.**